திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு புயல் வெள்ளம் ஏற்பட்டாலும் அங்கெல்லாம் இந்த ஆஃபர் முறையில் விடப் படும்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு என்னென்ன பணிகள் நியமன முறையில் ஒப்படைக்கப் படுகின்றன? அதற்கான காரணங்கள் என்ன என்று அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, புயல் வெள்ளம் போன்ற இயற்கை உற்பாதங்களுக்கு ஆளாக்கப்படும் நேரங்களில், ரோடுகள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள் போன்ற இடங்களில் ஏற்படும் சேதங்களுக்கு நிவாரணம் அளிக்க போர்க் கால அடிப்படையில் வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே இப்பணிகள் நியமன முறையில் நிறை வேற்றப்படுகின்றன. டெண்டர் கேட்டு வேலைகள் கொடுக்க வேண்டும் என்றால் குறைந்த பட்சம் ஒரு மாத காலத்திற்குப் பின்னால்தான் ஒப்பந்தக்காரர்களிடம் வேலையை ஒப்படைக்க முடியும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, புயல் வெள்ளக் காலத்திலே மிக அவசரமாக சில நடவடிக்கைகள் செய்ய வேண்டியிருக்கிறது. அது உண்மைதான். ஆனால் சில பாதிப்புகளுக்குச் செய்ய வேண்டிய வேலைகள், அதிகமாகச் செய்யப்பட வேண்டிய பின் வேலைகள் எல்லாம் ஒரு ஆண்டு கூட கால நேரம் தேவைப்படுகிறது. அம்மாதிரியான வேலை களுக்கு டெண்டர் கேட்டு அரசு வேலைகளை அளிக்குமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே அரசு அவ்வாறுதான் வேலைகளை அளிக் கிறது.

நாட்டரம்பள்ளித் தொகுதியில் மின்வாரியப் பிரிவு அலுவலகங்கள்

* வினா எண் 102—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா!

(அ) வட ஆற்காடு மாவட்டம், நாட்டரம்பள்ளித் தொகுதி யைச் சேர்ந்த விஷமங்கலம், சுந்தரம்பள்ளி, கொரட்டி வெங்களா புரம் ஆகிய ஊர்களில் தமிழ்நாடு மின்வாரியப் பிரிவு அலுவலகங் கள் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளதா?

(ஆ) ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் இதுவரை ஏன் திறக்கப்படாமல் இருக்கிறது?

1979 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (ஆ) : திருப்பத்தூர் கிராமப்புறம் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு தமிழ்நாடு மின்சாரப் பிரிவு அலுவலகங்களின் தலைமையகங்கள் முறையே சுந்தரம்பள்ளி, கொரட்டி மற்றும் விஷமங்கலம் ஆகிய ஊர்களுக்கு 6-6-79 முதல் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றன. வெங்களாபுரத்தில் ஏற்கெனவே ஒரு துணை மின் நிலையப் பிரிவு அலுவலகம் இயங்கி வருகிறது.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, மின் வாரியத்தில் வேலை செய்கிற ஊழியர்கள் ஒரு சில இடங்களில், அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிற வகையிலே பொதுமக்களிடம் நடந்து கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கிறார் என்று எனக்குப் புரியவில்லை, ஏதேனும் குறிப்பிட்ட புகார்கள் வருமேயானால் அதைப்பற்றி நிச்சயமாக மின் வாரியத்திற்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Consumption of power by private parties.

*Q. No. 103—Thiru SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Elecricity be pleased to state :

(a) whether any scheme of voluntary disclosure of illegal power used by private parties has been introduced in this State and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) 28-4-79 முதல் அமலுக்கு வந்த இத் திட்டப்படி, குறைவழுத்த மின் பளு (LT Power-load consumers) பயனீட்டாளர்கள் ஒப்பந்தத்திற்கு அதிகப்படியாக உபயோகிக்கும் மின் சுமைகளை 31-7-79-க்குள் தாங்களாகவே அறிவித்தால் மின் வாரியம் அபராதமின்றி அவற்றை அங்கீகரிக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டதற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் மின் இணைப்புப்படி இன்றைக்கு கோயம்புத்தூர், ஊட்டி போன்ற இடங்களில் மின்சாரம் அதிகமாக திருடப்பட்டு, பயன்படுத்தப் பட்டு அதன் காரணமாக 2 யானைகள் கூட இறந்தது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரிவிக்க இயலுமா ?